**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.564/2009**

**Prosecution Witness : 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : குருவம்மாள் | **Caste** | : | |
| **Husband's Name** | : கணேசன் | **Calling** | : | கூலி வேலை |
| **Village** | : விராளப்பட்டி | **Religion** | : | |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : | **50** |
| | | **Dated** | : | **22.07.2026** |

**22.07.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**1 முதல் 4 எதிரிகள் ஆஜர்.**

**<u>சாட்சி மனுவின் பேரில் அனுமதிக்கப்பட்டு மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனது வயது என்ன என்றால், 50 ஆகும். 1977ம் வருடம் 1ம் எதிரி 12 வயது மைனர் என்பதால் அவருடைய தந்தை ராமசாமி நாயுடு தனது மகன் கண்ணையார் சாமி பெயரில் வழக்கு சொத்தை எழுதி வைத்தார் என்றால், சரியல்ல. 1991க்கு முன்னர் 1ம் எதிரியின் தந்தை இறந்துவிட்டதால் 1ம் எதிரி 2ம் எதிரியை காதல் திருமணம் செய்து கொண்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. 2015–2016 வரை நான் விராளிப்பட்டி கிராமத்தில் தான் குடியிருந்து வந்ததேன் என்றால், சரிதான். விராளிப்பட்டி ஒரு சிறுகிராமம் என்றால், சரிதான். 1ம் எதிரிக்கும், 2ம் எதிரிக்கும் நடந்த திருமணம் எனக்கு தெரியும் என்றால், தெரியாது. 1ம் எதிரியின் கண்ணய்யாசாமிக்கு தெரியுமா என்றால், தெரியாது.

1ம் எதிரி திருமணம் முடியும் முன் கண்ணய்யாசாமி வீட்டில் தான் வாழ்ந்தார் என்றால், அது பற்றி எனக்கு தெரியாது.

பூர்விக சொத்தில் பங்கு தரகூடாது என்ற கெட்ட எண்ணத்தில் எதிரிகள் மீது பொய்யான புகாரை எனது மகளை வைத்து காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கொடுத்து எதிரிகளை கடந்த 15 வருடங்களுக்கு மேலாக நீதிமன்றத்திற்கு அழைக்களித்து அவர்கள் வாழ்வாதரத்தை கெடுத்து நான் மோசடியாக நடந்துக்கொண்டுள்ளேன் என்றால், சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.07.22 18:33:21 +0530

Judicial Magistrate No.II
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.564/2009**

**Prosecution Witness : 1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : சித்ரா | **Caste** | : |
| **Husband's Name** | : அசோக்குமார் | **Calling** | : வீட்டுக்குடித்தனம் |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : சென்னை | **Age** | : 37 |
| | | **Dated** | : 22.07.2026 |

**22.07.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**1 முதல் 4 எதிரிகள் ஆஜர்.**

**<u>சாட்சி மனுவின் பேரில் அனுமதிக்கப்பட்டு மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கில் 1ம் எதிரி எனது தந்தையின் உடன் பிறந்த தங்கை என்றால், சரிதான். 2வது எதிரி 1ம் எதிரியின் கணவர் என்றால், சரிதான். 2002ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்திற்கும் 3, 4 எதிரிகளுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால், சரியல்ல. 2002ம் ஆண்டும் நரசம்மாளுக்கு பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தில் 3, 4 எதிரிகளான சௌந்தரராஜன், பிரகாஷ் ஆகியோர் சாட்சி கையொப்பம் போட்டு உள்ளார் என்றால், சரிதான். 2002ம் ஆண்டு கிரைய பத்திரத்தில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளவர்கள் நிலக்கோட்டை தாலூக்கா, குரும்பப்பட்ட கிராமத்தை சேர்ந்த அய்யங்களை மகனும், காட்டமுத்தும் என்றால், சரிதான்.

அன்றை காலகட்டத்தில் சார் பதிவாளர் அலுவலகத்தில் இன்னார் என்று நிரூபிக்க 2 சாட்சிகள் இருந்தால் பத்திரப்பதிவு நடைபெறும் என்றால், சரிதான். புகார் மனு 2007ல் கொடுத்தேன் என்றால், சரியல்ல, 2004ல் எனது அப்பா கொடுத்தார், 2007ல் நான் கொடுத்தேன். எனது தந்தை எந்த காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால், வத்தலகுண்டு காவல் நிலையத்தில்.

அந்த புகார் மனு விசாரணையில் எனது தந்தை கிரைய பத்திரம் எழுதிக்கொடுத்ததை ஒப்புக்கொண்டதால் மேற்படி புகார் முடித்து வைக்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. எனது தந்தை 01.11.2005ல் இறந்து விட்டார் என்றால், சரிதன். அவர் இறப்பதற்கு முன்பு 2002 கிரைய பத்திரம் சம்மந்தமாக எந்த வித நடவடிக்கையும், எந்தவித காவல் நிலையத்திலும் எடுக்கவில்லை என்றால், சரியல்ல. 2004 திண்டுக்கல் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்து அதில் கையொப்பம் மோசடி என்று குறிப்பிட்டுள்ளார்கள். மேற்படி ஆவணத்தை 2007ல் நான் கொடுத்த புகாரில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால், சொல்லியுள்ளேன். அவ்வாறு நான் புகார் கொடுக்கும் போது மேற்சொன்ன சங்கதிகளை நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரியல்ல. கிரைய பத்திரம் பதிவு செய்வதற்கு சார் பதிவாளர் முன்பு அலுவலகத்தில் எனது தந்தை கைரேகை வைத்துள்ளார் என்றால், இல்லை.

கைரேகை நிபுனருக்கு கைரேகை ஒப்பாய்வுக்காக அனுப்பவில்லை என்றால், சரியல்ல, காவல் கண்காணிப்பாளர் அனுப்பினார். அவ்வாறு கைரேகை ஒப்பாய்வுக்கு அனுப்பி இருந்தபோது கைரேகை ஒப்பாய்வு ஆய்வறிக்கையை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளோமா என்றால், இல்லை. 1ம் எதிரி குடும்பம் பால் பண்ணை நடத்தி வந்தார் என்றால், சரிதான். பால் பண்ணையில் ஏற்பட்ட நஷ்டத்தினால் 3,4 எதிரிகள் 2004ம் வருடம் 1ம் எதிரிக்கு கொடுத்த கடன் பொறுப்பிற்காக கிரைய பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ள விபரம் தெரியுமா என்றால், தெரியும். மேற்சொன்னவாறு பிரச்சனை சம்மந்தமாக சார் பதிவாளர் அலுவலகத்தில் சொத்து சம்மந்தப்பட்ட தாவா மனு கொடுத்தேனா என்றால், இல்லை. வழக்கு சொத்து 3 ஏக்கர் 13 சென்டு என்றால், சரிதான். அதில் சரிபாதி ஆக 1 ஏக்கர் 56 1/2 சென்டு எனது தந்தை 1ம் எதிரிக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால், சரியல்ல.

எனது தாத்தா ராமசாமிநாயுடு 1ம் எதிரியும், எனது தந்தையும் சிறு வயதாக இருக்கும்போதே இறந்து விட்டார் என்றால், சரிதான். 3, 4 எதிரிகள் 2004ம் வருடம் கிரையபத்திரத்தை 17.09.2012ம் வருடம் கிரைய

ரத்துபத்திரத்தின் மூலம் ரத்து செய்து 1ம் எதிரியிடம் இருந்து பணம் பெற்று சுவாதினத்தை ஒப்படைத்துவிட்டார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால், தெரியாது. மீதமுள்ள சொத்து வேண்டும் என்று நிலக்கோட்டை உரிமையியல் நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. 12.04.2019ம் தேதி 1ம் எதிரி தனது இரு மகன்கள் பேரில் தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்த விபரம் தெரியுமா என்றால், தெரியாது. மீதமுள்ள 1 ஏக்கர் 56 1/2 சென்ட்–ஐ விராளிப்பட்டியை சேர்ந்த சுபா என்பவருக்கு கடந்த 2017ம் வருடம் நான் கிரையம் செய்து கொடுத்துள்ளேன் என்றால், சரிதான்.

1ம் எதிரி எந்த ஒரு மோசடியான செயலிலும் ஈடுபடவில்லை என்றாலும், 1992ம் வருடம் 1ம் எதிரிக்கு கண்ணையா சாமி ஊர் பெரியவர்கள் முன்னிலையில் எழுதிக்கொடுத்த ஒப்பந்தப்பத்திரத்தின் படி 2002ம் ஆண்டு கிரயம் பத்திரம் பதிவு செய்துக்கொடுத்துள்ளார் என்றால், சரியல்ல. பழி வாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் 2ம் எதிரியை வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால், சரியல்ல. 1ம் எதிரிக்கு உண்டான உரிமையை எனது தந்தை இறப்பதற்கு முன்னர் நிறைவேற்றிவிட்டு இறந்துவிட்டார் என்றால், சரியல்ல. எந்த ஒரு ஆவணமும் இல்லாமல் இந்த புகாரை நான் கொடுத்துள்ளேன் என்றால், சரியல்ல. நான் கொடுத்த புகார் மனுவில் எந்த ஆவணங்களை பற்றியும் குறிப்பிடாமல் வெறுமன புகாரை மற்றும் வைத்துகொண்டு எங்கிருந்த வந்த அலுத்தத்தினால் எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. பூர்விக சொத்துகளில் 1ம் எதிரி பங்கிற்கு வந்துவிட கூடாது என்பதற்காக இந்த புகாரை மோசடியாக நான் கொடுத்துள்ளேன் என்றால், சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C Digitally signed by DINESH KUMAR C Date: 2026.07.22 18:33:28 +0530

Judicial Magistrate No.II

Dindigul.